2020-ம் வருடம் ஏப்ரல் மாதம் 16-ம் தேதி வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

1. இந் நகராட்சிக்கு தேவையான சொத்துவரி, குடிநீர் கட்டணம், தொழில் வரி மற்றும் வரியில்லா இனங்களின் வரி செலுத்தும் கணணி இரசீதுகள், பிறப்பு சான்று படிவங்கள், பதிவேடுகள், இருப்பில் A4 Paper மற்றும் Tonner-கள் தற்போது இருப்பில் இல்லாத காரணத்தால் மேற்படி பொருட்களை வடாற்காடு மாவட்ட சிறுதொழில் கூட்டுறவு அச்சகம் லிட், வேலூர் (Napco Ltd, Vellore) அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கி பணியினை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினத்தொகை ரு.7.00 இலட்சத்திற்கும், மேலும் பணியின் அவசர அவசியத்தை கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டதை பர்ாவைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- அனுமதி வழங்கலாம்
ந.க.எண்.433/பி3/2018
தீர்மான எண்.35:- அனுமதிக்கப்பட்டது.

2. இந் நகராட்சியில் வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு 24.03.2020-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம | மதிப்பீடு தொகை (ரு.இலட் சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | வார்டு.எண்.1-ல் மளிகை தோப்பு பகுதியில் இண்டர்நேஷனல் டேனரி சந்திப்பு மற்றும் குறுக்கு தெரு பகுதியில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல். | 9.30 | 1.ஆர்.இசைசெல்வ மூர்த்தி<br>2. எம்.தீனதயாளன் | 0.05% மதிப்பீட்டைவிட குறைவு<br>1.15% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | வார்டு.எண்.2-ல் அகமதியா நகர் 2-வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலமும், ஜலால்பேட்டை 3-வது தெரு மற்றும் ஜலால்பேட்டை பிரதான சாலையில் சிறுபாலங்கள் அமைத்தல் | 6.70 | 1.எஸ்.அருணாசலம்<br>2.ஏ.வி.நாகராஜன் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு<br>1.10% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வார்டு.எண்.4-ல் காரிய மண்டபம் அருகில் உள்ள மழைநீர் வடிகால்வாய் மீது குறுக்காக உள்ள பழைய சிறுபாலம் பழுதடைந்துள்ளதை அகற்றி புதியதாக கட்டுதல், நெசவுக்கார 1-வது தெருவில் உள்ள பழுதடைந்துள்ள பழைய சிறுபாலத்தையும், கஸ்பா.அ பிரதான சாலையில் அப்புகான் தெரு முதல் அருள்மிகு ரேணுகாம்பாள் கோவில் முன்புறம் வரை பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால்வாயினையும் புதியதாக அமைத்தல். | 8.80 | 1.ஜி.பிரபாகரன்<br><br>2. எம்.தீனதயாளன் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு<br><br>1.20% மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு.எண்.14-ல் நல்லகாம தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் மற்றும் காசி தெரு மற்றும் தேவு தெரு சந்திப்பில் சிறுபாலம் அமைத்தல். | 6.10 | 1.ஜி.பிரபாகரன்<br><br>2. எம்.தீனதயாளன் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு<br>1.25% மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | வார்டு எண்.33 சான்றோர்குப்பம் பகுதியில் உள்ள சமுதாய கழிப்பறையில் பம்பு அறை மிகவும் பழுதடைந்து இடிந்துவிழும் நிலையில் உள்ளதை இடித்து அப்புறப்படுத்துதல் மற்றும் மேற்படி சமுதாய கழிப்பறையின் சுற்றுச்சுவர் பழுதடைந்துள்ளதை பராமரிப்பு பணி செய்தல். | 3.00 | 1.ஜி.பிரபாகரன்<br><br>2. எம்.தீனதயாளன் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு<br><br>0.90% மதிப்பீட்டை விட அதிகம் |
| 6 | வார்டு.எண்.34-ல் உள்ள ஆதிதிராவிட மாணவர்கள் தங்கும் விடுதி அமைந்துள்ள பிரதான சாலையின் வடக்கு பகுதியில் உள்ள 2-வது குறுக்கு தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 9.90 | 1.ஜி.பிரபாகரன்<br><br>2. எம்.தீனதயாளன் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு<br><br>1.10% மதிப்பீட்டை விட அதிகம் |
| 7 | வார்டு.எண்.36-ல் சாமியார் மடம் பகுதியில் பிரதான சாலையில் கடைசி பகுதியில் உள்ள பிரதான கால்வாயில் பாலம் அமைத்தல். | 7.20 | 1.ஆர்.இசைசெல்வ மூர்த்தி<br><br>2. எம்.தீனதயாளன் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு<br>1.25% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு:- அ.வரிசை எண்.1 மற்றும் 7-ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்குதிரு.ஆர்.இசைசெல்வமூர்த்தி ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம்.

ஆ. வரிசை எண்.2-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு திரு.எஸ்.அருணாசலம் ஒப்பந்ததார் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.

வரிசை எண்.3 முதல் 6 வரை குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு திரு.ஜி.பிரபாகரன் ஒப்பந்ததாரர் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்.1315/2019/இ1

தீர்மான எண்.36:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பிரதான சாலையில் பொருத்தப்பட்டுள்ள பழைய மின்விளக்குகள் குறைவான வெளிச்சம் உள்ளதால், பழைய மின்விளக்குகள் 50 எண்ணிக்கை அகற்றி புதியதாக LED மின்விளக்குகளை மற்றும் இதர மின் உபகரணங்களை பொருத்துதல் பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ8.50 லட்சத்திற்க்கு தீர்மான எண் 09 நாள் 24.01.2020 அங்கிகாரம் பெற்று 19.03.2020-ஆம் தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் ஆணையரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **ஒப்பந்ததாரர் பெயர்**<br>**திரு/திருமதி** | **ஒப்பந்தப்புள்ளி**<br>**சதவீதம்** |
|---|---|
| 1.எஸ். அருணாசலம் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. ஏ.வி. நாகராஜன் | 1.20% மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு. எஸ். அருணாசலம், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 119/2020/இ2**

தீர்மான எண்.37:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் உள்ள 7 எண்ணிக்கை உயர் கோபுர மின் விளக்குகளில் 400Watts மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளதை அகற்றி 200watts LED மின்விளக்குகளை பொருத்துவதால் மின்சேமிப்பு எற்பட்டு மின்கட்டணம் குறையும் எனவே, மேற்படி பணிக்கு ஆகும் செலவினத் தொகை ரூ8.20 லட்சத்திற்க்கு தீர்மான எண் நாள் அங்கிகாரம் பெற்று 27.03.2020-ஆம் தேதியன்று தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விபரம் ஆணையரின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **ஒப்பந்ததாரர் பெயர்**<br>**திரு/திருமதி** | **ஒப்பந்தப்புள்ளி**<br>**சதவீதம்** |
|---|---|
| 1.எஸ். அருணாசலம் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு. |
| 2. ஏ.வி. நாகராஜன் | 1.25% மதிப்பீட்டை விட அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு. எஸ். அருணாசலம், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 145/2020/இ2**

தீர்மான எண்.38:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருவிளக்குகள் பராமரிப்பு பணிக்கு நகராட்சியில் தெருவிளக்கு மின் பணியாளர்கள் போதுமானதாக இல்லாததால் வார்டு எண்.01 முதல் 24 வரையுள்ள பகுதிகளுக்கான தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் தனியார் மூலம் மேற்க்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி பராமரிப்பு பணியினை தனியார் மூலம் மேற்க்கொள்ள ரூ 30.00 இலட்சத்திற்க்கு தீர்மான எண் 163 நாள்: 18.02.2019-இல் அங்கீகாரம் பெற்று 31.03.2020-ஆம் தேதி வரை பணிகள் மேற்கெள்ளப்பட்டதில் ரூ 176,125/- மட்டுமே மீதம் உள்ளது. எனவே, மேற்படி பணியினை மேலும் மூன்று மாத காலத்திற்க்கு (01.04.2020 முதல் 30.06.2020) தொடர்ந்து பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ7.00 லட்சத்திற்க்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

1. அங்கீகாரம் வழங்கலாம். மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.
2. கோவியட் - 19 கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்காக ஊரடங்கு உத்திரவு அமலில் உள்ளதால் தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணியினை எற்க்கனவே செய்து வரும் ஒப்பந்ததாரரை கொண்டு பணியினை மேற்க்கொள்ள அங்கீகிகாரம் வழங்கலாம்.

**ந.க.எண். 67/2019/இ2**

தீர்மான எண்.39:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகளில் உள்ள மினிபவர் பம்ப் நீரேற்று நிலையங்களில் உள்ள மற்றும் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளில் உள்ள மின்மோட்டார் திறந்தவெளி கிணற்றில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணறுகளில் உள்ள பவர் பம்ப் மோட்டார்கள், பொது கழிப்பிடங்களில் உள்ள கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டார்கள், நகராட்சி பள்ளிகளில் உள்ள மின்மோட்டார்கள் என மொத்தம் உள்ள 343 மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 5.00 லட்சத்திற்க்கு அங்கீகாரம் கோரப்படுகின்றது.

குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியத்தை கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு **09.04.2020-ஆம்** தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி** | **ஒப்பந்தப் புள்ளி சதவீதம்** |
|---|---|
| 1. எஸ். அருணாசலம் | 0.05 % மதிப்பீட்டை விட குறைவு |
| 2. எ. வி. நாகராஜன் | 0.66 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:**

1. மேற்படி பணியினை மேற்கொள்ளவும், மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
2. குடிநீர் விநியோகப்பணியின் அவசர அவசியத்தை கருதி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரியமைக்கும், குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர், திரு. எஸ். அருணாசலம், என்பவருக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண். 760/இ2/2020**

தீர்மான எண்.40:- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/-த.செளந்தரராஜன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி